[1968 ஆகஸ்ட் 29

ஊராட்சித் தலைவர்களின் அதிகாரம்

*154 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து தலைவர்களுக்குக் கூடுதலாக அதிகாரம் வழங்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) and (இ) ஊராட்சித் தலைவர்களுக்குக் கூடுதலாக அதிகாரம் வழங்கும் உத்தேசம் தற்போது ஏதும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, ஊராட்சித் தலைவர்கள் அதன் முன்னேற்றத்திற்குத் தேவையான பொருள்களை ஆணையாளரிடமிருந்து வாங்குவது பெரிதும் சிரமமாக இருக்கிறது என்ற குறைபாடு வந்ததா ? இவைகளை நீக்குவதற்கு வழி செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஒவ்வொரு ஊருக்கும் ஒரு ஆணையரை நியமிப்பது என்பது இயலாத காரியம். ஆணையரிடமிருந்து பொருள்களை வாங்குவதில் சிரமம் இருப்பதாகத் தனிப்பட்ட முறையிலே எந்த குற்றச் சாட்டும் வந்ததாகத் தெரியவில்லை. எங்கேயாவது அப்படியிருந்தால் அதைக் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அந்தச் சுமையைப் போக்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. பு. செ. முத்துச்செல்வன் : துணைத் தலைவரவர்களே, பேரூராட்சித் தலைவர்களுக்கு அதிக அதிகாரம் இல்லாமல், நிர்வாக அதிகாரிகள் தன்னிச்சையாக நடந்து கொள்ளும் நிலையிருப்பதால் அந்த நிலையை மாற்றிப் பேரூராட்சிகளில் உள்ள "பைல்" கள் அதன் தலைவரின் ஒப்புதலைப் பெற வேண்டுமென்ற அளவுக்கு ஏற்பாடு செய்யப்படுமா ? அத்துடன் நிர்வாக அதிகாரியின் "பர்சனல் ஃபைலை"த் தலைவருடைய பொறுப்பிலே விட உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பேரூராட்சித் தலைவர்களுக்கென சில அதிகாரங்களும், நிர்வாக அதிகாரிகளுக்கென சில வேலை முறைகளும் வகுக்கப்பட்டிருக்கின்றன. அவரவர்கள் தங்கள் தங்களுக்குரிய கடமைகளை ஆற்றும் நேரத்தில் சிக்கல்கள் வருவது இல்லை. ஒருவருடைய கடமையில் இன்னொருவர் தலையிடும்பொழுதுதான் சிக்கல்கள் வருகின்றன. அரசாங்கத்திற்கு அனுப்பக்கூடியவைகளை ஊராட்சித் தலைவர் மூலம் அனுப்ப வேண்டுமென்று விதிமுறைகள் இருக்கின்றன. அரசாங்கத்திலிருந்து அனுப்பப்படும் எல்லாத் தபால்களும் ஊராட்சி மன்றத்தின் தலைவர் மூலமாக நிர்வாக அதிகாரிக்குச் செல்ல வேண்டுமென்பது தற்போதைய விதிமுறைகள் ஆகும்.

திரு. நா. சோமசுந்தரம் : தலைவரவர்களே, நகரப்பஞ்சாயத்துத் தலைவர்களும், பல கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களும் ஆணைச் சீட்டு வழங்குவதன் பெயராலே அவர்களுக்கு மரியாதைக் குறைவும், கண்ணியக்குறைவும் ஏற்படுகின்றது. எனவே, பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு வரும் பழியைப் போக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கண்ணியக்குறைவை உண்டாக்கும் முறையில் எந்தச் சட்டமும் இருப்பதாகத் தெரிய வில்லை. அதுபற்றிய பிரச்சினை எழவில்லை.

1968 ஆகஸ்ட் 26]

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : தலைவரவர்களே, மத்திய சர்க்காரிடம் உள்ள அதிகாரங்களை மாநில அரசுக்குப் பகிர்ந்து கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்திவரும் இந்த அரசுக்கு முதலில் இந்த அரசிடம் குவிந்திருக்கும் அதிகாரங்களை ஸ்தல ஸ்தாபனங்களிடம் பகிர்ந்து கொடுக்க முன்வரும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மத்திய அரசிடமிருந்து இந்த அரசுக்குக் கிடைக்க வேண்டிய அதிகாரங்கள் கிடைத்தால் குவிந்திருப்பதாகச் சொல்ல முடியும். அந்த நிலை வரும்பொழுது நிச்சயமாகப் பகிர்ந்து கொடுப்பதிலே எந்தவிதமான சங்கடமும் ஏற்படாது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினக்கள்-விடைகள் முடிவுற்றன.

THIRU K. VINAYAKAM : On a point of order, Sir. To my knowledge the heads of the panchayats are known as presidents. May I know when they became 'chairman' as is now printed in the question list ? மூற் பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக் கேள்வியிலே பஞ்சாயத்துத் தலைவர் என்றுதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. "சேர்மன்" என்று தவருகத்தான் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

பள்ளிப் பாளையம் சேஷசாயி காகிதத் தொழிற்சாலை கதவடைப்பும் தொழிலாளர் நிலையும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள், "சேலம் மாவட்டம் பள்ளிப்பாளையம் சேஷசாயி பேப்பர் மில் திடீரென்று 23—8—1968 தேதி முதல் கதவடைப்பு செய்யப்பட்டுள்ளதைப் பற்றியும் அதை எதிர்த்து கிளர்ச்சி செய்த தொழிலாளர்களை கடுமையாகத் தாக்கியும் தொழிற்சங்க ஊழியர்களை கைது செய்துள்ளதைப்பற்றியும் அதனுல் 3,000 பேர்களுக்கு மேல் வேலையில்லாமல் கஷ்டப்படுவதைப்பற்றியும் விவாதிக்க சபையின் நடவடிக்கைகளை ஒற்றி வைக்க வேண்டும்" என்று ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறுர்கள்.

தொழில் தகராறுகளைத் தீர்க்க வேறு வழிவகைகள் இருக்கிற காரணத்தாலும், கதவடைப்புச் செய்வது, வேலை நிறுத்தம் ஆகியவற்றைப்பற்றி இங்கே ஒற்றிவைப்புத் தீர்மானம் கொண்டு வரக்கூடாது என்று சட்ட மன்ற விதிகள் இருப்பதாலும் இதற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

3. அரசினர் தீர்மானம்.

விதி 41 (3)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, இரண்டிற்கு மேற்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் ஒரே கூட்டத்தில் கொண்டுவருவது சம்பந்தமான விதியைத் தளர்த்த வேண்டுமென்ற தீர்மானத்தை மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் முன்மொழிவார்கள்.